Koviloor Digital Library

Acc. No. 30294
R 174173-2

அருள்மிகு லயன் சித்தி விநாயகர் கோயில்

சிங்கப்பூர்

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 30297

Koviloor Digital Library

3-2

உ

சிவமயம்

ஸ்ரீ லயன் சித்தி விநாயகர்

Koviloor Digital Library

உ
சிவமயம்

ஸ்ரீ தெண்டாயுதபாணி

Koviloor Digital Library

உ
சிவமயம்

அருள்மிகு லயன் சித்தி விநாயகர்

73, கியோங் சியாக் ரோடு,
சிங்கப்பூர் – 089 167.

ஓம் பூர்ப்புவஸ்ஸுவ:
தத்ஸ விதுர்வரேண்யம்!
பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந:
ப்ரசோதயாத்!

– *காயத்ரி*

ஸ்ரீ கணேச காயத்ரி

ஓம் ஏக தந்தாய வித்மஹே!
வக்ரதுண்டாய தீமஹி!!
தன்னோ தந்தி: ப்ரசோதயாத்!

ஸ்ரீ மஹா கணபதி மூல மந்த்ரங்கள்

1. ஓம் ஸ்ரீம் ஹ்றீம் க்லீம்
க்லௌம் கம் கணபதயே

Koviloor Digital Library

வரவரத ஸர்வஜனம்மே
வசமானய ஸ்வாஹா

2. ஹ்றீம் கம் ஹ்றீம் மஹா
கணபதயே ஸ்வாஹா

குரு தரிசனம்

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே

– கந்தர் அநுபூதி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்
கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

– ஔவையார்

Koviloor Digital Library

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்றுகின்றேனே.

– திருமூலர்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது
பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

– ஔவையார்

Koviloor Digital Library

பிள்ளையாரின் குட்டுடனே பிழைநீக்க
உக்கியிட்டு
எள்ளளவும் சலியாத எம்மனத்தை
உமக்காக்கித்
தெள்ளியனாய்த் தெளிவதற்குத்
தேன்தமிழில் போற்றுகின்றேன்
உள்ளியதை உள்ளபடி உகந்தளிப்பாய்
கணபதியே!

முன்னவனே! யானை முகத்தவனே!
முத்திநலம்
சொன்னவனே! தூய்மெய்ச் சுகத்தவனே!
– மன்னவனே!
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையஞ்
சேகரனே!
தற்பரனே! நின்தாள் சரண்.

– திருஅருட்பா

Koviloor Digital Library

ஓம் சுக்ல அம்பரதரம் விஷ்ணும்
சசி வர்ணம் சதுர் புஜம்
ப்ரஸந்ந வதனம் த்யாயேத்
ஸர்வ விக்ந உபசாந்தயே
மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மஹேச்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே.

ஆடிய பாதா! நீடிய கரனே! ஆனை
முகத்தோனே!
தேடிய போது ரகசிய முடனே சீக்கிரம் நீ
வருவாய்
பாடிய நாவும் கூடிய தமிழும் பகரும்
பெருமானே!
நாடிய கூடிய நாவிலுகந்தருள் நல்ல
விநாயகனே!

– *ஔவையார்*

Koviloor Digital Library

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதி வர மருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

– திருஞான சம்பந்தர்

மங்களத்து நாயகனே மண்ணாளும்
முதலிறைவா!
பொங்குதன வயிற்றோனே பொற்புடைய
ரத்தினனே!
சங்கரனார் தருமதலாய் சங்கடத்தைச்
சங்கரிக்கும்
எங்கள் குலவிடிவிளக்கே! எழில்மணியே
கணபதியே!

அப்பமுடன் பொரிகடலை அவலுடனே
அருங்கதலி

Koviloor Digital Library

ஒப்பிலா மோதகமும் ஒருமனதாய்
ஒப்பித்து
எப்பொழுதும் வணங்கிடவே எனையாள
வேண்டுமென
அப்பனுக்கு முந்திவரும் அருட்கனியே
கணபதியே!
இன்றெடுத்த இப்பணியும் இனித்தொடரும்
எப்பணியும்
நன்மணியே சண்முகனார் தன்னுடனே நீ
எழுந்து
என்பணியே உன்பணியாய் எடுத்தாண்டு
எமைக்காக்க
பொன்வயிற்றுக் கணபதியே
போற்றியெனப் போற்றுகின்றேன்.

– *துர்க்கைச் சித்தர்*

Koviloor Digital Library

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசைப் பாட
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்

Koviloor Digital Library
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதலைந் தெழுந்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயத் தன்னில்
திருவடி வைத்துத் திறமிகு பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்

Koviloor Digital Library
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேரா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் கழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி அதனிற் கூடிய அசைவை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

Koviloor Digital Library

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமுமில்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளக்க நிறுத்திக்

Koviloor Digital Library

கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சுக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

– விநாயகர் அகவல் முற்றிற்று.

காரிய சித்தி மாலை

ஸ்ரீ கற்பக விநாயகர் எனக்கு மங்களம் தந்தருள்க! ஆறுமுகப் பெருமான் எனக்கு மங்களம் தந்தருள்க! ஸ்ரீ மகேஸ்வரரும் எனக்கு மங்களத்தைத் தந்தருள்க! ஓம் என்னும் பிரணவ மந்திரத்தில் குடி கொண்டு யானை முகமும், நான்கு தோள்களும் பெருத்த தொந்தியும் வாய்ந்தவரான ஸ்ரீ கற்பகவிநாயக மூர்த்தியை நான் தொடங்கும் சகல காரியங்களிலும் எந்தவித விக்கினங்களும் ஏற்படாமல் நிறைவேறுவதற்காக வணங்குகிறேன்.

Koviloor Digital Library
மங்களமுகம் வாய்ந்தஸுமுகன், ஒற்றைக்கொம்பை உடைய ஏக தந்தன், கபில நிறம் வாய்ந்த கபிலன், யானைக் காதுகள் உள்ள கஜகர்ணன், பெரும் வயிற்றோடு கூடிய லம்போதரர், குள்ளத் தோற்றமுள்ளவிகடர். சகல விக்னங்களுக்கும் ராஜாவான விக்ன ராஜன், துஷ்டச் செயல்களையும் இடையூறுகளையும்நீக்குவதில் வல்லவரான விநாயகன் நெருப்பைப் போல் ஒளி வீசித் திகழ்பவரான தூம கேது, பூதகணங்களுக்குத் தலைவராக விளங்கும் கணாத்யக்ஷன், நெற்றியில் பிறைச் சந்திரனைச் சூடியவரான பாலசந்திரன், யானை முகத்தையுடைய கஜானனன், வளைந்த துதிக்கரமுள்ள வக்ரதுண்டன், முறம் போன்ற அகலமான காதுகள் உள்ள சூர்ப்பகர்ணன், தம்மை வணங்கி நிற்கும்

Koviloor Digital Library
பக்த கோடிகளுக்கு அருள் பொழியும் ஹேரம்பன், கந்தப் பெருமானின் தமையனரான ஸ்கந்த பூர்வஜன்.

இவ்வாறு சொல்லப்படும் விநாயகப் பெருமானின் பதினாறு திருநாமங்களையும் வித்தைகளைக் கற்கத் தொடங்கும் போதும் வீட்டைவிட்டு வெளியில் கிளம்பிச் செல்லும் போதும், போர்க் காலத்திலும், இன்னல்கள் வந்த போதும், யாராவது வாசித்தாலும், அல்லது செவிகுளிரக் கேட்டாலும் அவர்களுக்கு எந்தவித விக்கினங்களுமே சம்பவிக்காது.

(இது முத்கல முனிவருக்கு காசிப மகரிஷி உபதேசித்தது. இதைத் தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு பாடித் தந்துள்ளார்)

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும், எவன்பால் உதிக்குமோ?

Koviloor Digital Library

ஏந்த உலகும், எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ?
சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும், எவன்பால் தகவருமோ?
அந்த இறையாம் கணபதியை,
அன்பு கூரத் தொழுகின்றோம்
உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருள், எவன்? இவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளி, யாவன்?
உலகம் புரியும் வினைப் பயனை
ஊட்டும் களைக்கண், எவன்? அந்த
உலக முதலைக், கணபதியை,
உவந்து சரணம் அடைகின்றோம்.
இடர்கள் முழுதும் எவனருளால்?
எரிவீழும் பஞ்செசன மாயும்?
தொடரும் உயிர்கள், எவனருளால்,

Koviloor Digital Library

சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்?
கடவுள் முதலோர்க்கு ஊறு இன்றிக்
கருமம் எவனால் முடிவுறும்? அத்
தடவு மருப்புக் கணபதி பொன்
சரணம், சரணம் அடைகின்றோம்.
மூர்த்தி யாகித், தலமாகி,
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி, அறிந்தறியாத்
திறத்தி னானும், உயிர்க்குநலம்
ஆர்த்தி, நாளும் அறியாமை
அகற்றி, அறிவிப் பான் எவன்? அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.
செய்யும் வினையின் முதல், யாவன்?
செய்யப் படும்அப் பொருள், யாவன்?
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன், யாவன்?

Koviloor Digital Library
உய்யும் வினையின் பயன், விளைவில்,
ஊட்டி விடுப்பான் எவன், அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.
வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன், யாவன்? விழுத்தகைய
வேதமுடிவில் நடம் நவிலும்
விமலன். யாவன்? விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்? எண்குணன், எவன்? அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.
மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான், எவன்? நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன்? தீயில்
மூன்றாய் நவில்வான், எவன்? வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி

Koviloor Digital Library

இயைவான், எவன்? வான் இடை

ஒன்றாம்

அண்ணல், எவன், அக் கணபதியை

அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில், பசு அறிவில்

பற்றற்கு அரிய பரன், யாவன்?

பாச அறிவும் பசு அறிவும்

பயிலப் பணிக்கும் அவன், யாவன்?

பாச அறிவும், பசு அறிவும்

பாற்றி, மேலாம் அறிவான

தேசன், எவன்? அக் கணபதியைத்

திகழச் சரணம் அடைகின்றோம்.

நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை யாவன்

தினமும் உம்மைச்

சந்தி களில்தோத் திரஞ்செயினும் சகல

Koviloor Digital Library
கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும்எண்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால் படிக்கில் அட்ட
சித்தியுறும்
திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம் தயங்க இருபத்
தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும் தோன்றும்
எனச்செப் பினர் மறைந்தார்.

ஆனைமுகக் கடவுளைப் போற்றுதல்

தத்துவ தீத போற்றி!
தத்துவ பொருளே போற்றி!

Koviloor Digital Library

தத்துவ முதலே போற்றி!
தத்துவ சொருப போற்றி!
தத்துத் தியன்ற தாத்து
விதங்களும் ஆனாய் போற்றி!
தத்துவ அறிவுக் கெட்டாத்
தயங்கு பேரறிவே! போற்றி!

உடலினுக் குயிரே போல
உயிர்க்குயிர் ஆனாய் போற்றி!
உடலுயிர்க் கறிவு நல்கி
உடலினைக் கழிப்பாய் போற்றி!
உடலுயிர் எனப்பின் நீங்கா
ஒற்றுமைப் பொருளே போற்றி!
உடனுறை உயிர்க்கும் எட்டா
ஒளிர்பெருஞ் சோதி போற்றி!

Koviloor Digital Library
விரவுத்த் துவத்தின் நீங்கி
மேலென நின்ற வாவி
வரமுற உருவு கொண்டு
வந்தருள் குரவ போற்றி!
பரவும்ஐந் தொழிலை நீக்கி
உயிரினைப் பணிப்பாய் போற்றி!
துரியத்தின் உயிரை வாங்கும்
சுடர்ப் பெருங் கடலே போற்றி!

பக்தர்கள் வழங்கா நின்ற
பலவுங் கைக் கொள்வாய் போற்றி!
புத்திகள் போகத்தார்க்கு
முடித்தருள் போகி போற்றி!
முத்தியை யோகத் தாற்கு
முடித்தருள் யோகி போற்றி!
எத்தொழில் அவர்க்கும் அந்தப்

Koviloor Digital Library
பயனருள் இறைவா போற்றி!
வேண்டிய அடியார்க் கெல்லாம்
விக்கினங் கெடுப்பாய் போற்றி!
வேண்டிவந் தனைசெய் யார்க்கு
விக்கினம் கொடுப்பாய் போற்றி!
வேண்டுவார் வேண்டிற் றெல்லாம்
விளைத்தருள் விமல போற்றி!
மாண்டதுட் டர்களைக்கொல்லும்
மறமிகு மள்ள போற்றி!
மகா கணபதி போற்றி போற்றி!

விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க

Koviloor Digital Library

விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.
கவின்வளரும் அதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவர்நகைதுன் முகர்காக்க
அள்ளெழிற்செஞ் செவிபாச பாணி காக்க

தவிர்தலுறா திளங்கொடி போல்
வளர்மணிநா சியைச் சிந்தித் தார்த்தர் காக்க
காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க

Koviloor Digital Library
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநாயகன் காக்க
இதயந் தன்னைத் தோமலுங் கணநாதர் காக்க
அகட்டினைத்துலங்கே ரம்பர் காக்க.

பக்கம் இரண்டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும் விக்கினகரன் காக்க
விளங்கிலிங்கம் வியாளபூ டணர்தாங் காக்க
தக்குய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க
சகனத்தை அல்லல் உக்ககண பன்காக்க
ஊருவைமங்கள மூர்த்தி உவந்து காக்க.
தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க
இருபதம் ஏக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய் ஆழ்தரச்செய்
ஆசாபூ ரகர் காக்க
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க

Koviloor Digital Library

அக்கினியில் சித்தீசர் காக்க
உமா புத்திரர்தென் ஆசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற்கென்னுந் திக்கதனிற்
காக்க
வாயுவிற்கச கன்னன் காக்க
திகழு தீசிதக்கநிதி பன்காக்க
வடகிழக்கில் ஈசநந் தனரே காக்க.

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க
இரவினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்க
இராக்கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்கு
பாசாங்குசர்தாம் விரைந்து காக்க
மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி

Koviloor Digital Library

புகழ்குலம் வலி சீரும் முற்றும்
பதிவான தனந்தானி யம்கிரகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.

வென்றிசீ விதம்கபிலர் காக்க
கரியாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஓதிடின்
நும்பால் இடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்காள் அறிமின்கள்
யார்ரொருவர் ஓதினாலும்
மன்று ஆங்கவர் தேகம் பிணியற
வச்சிரதேக மாகி மன்னும்.

Koviloor Digital Library

வேழ முகம்

குறள் - காப்பு

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.
வெற்றி முகத்து வேலவனைத் தொழப்
புத்தி மிகுத்து வரும்.
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளி யோடும் தொடர்ந்த வினைகளே.
அப்ப முப்பழம் அமுது செய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை யறுமே

பிள்ளையார் சிந்தனை

சிந்தித் தவரக்கருள் கணபதி ஜெய ஜெய
சீரிய ஆனைக் கன்றே ஜெய ஜெய
அன்புடை அமரரைக் காப்பாய் ஜெய ஜெய
ஆவித்துணையே கணபதி ஜெய ஜெய
இண்டைச் சடைமுடி இறைவா ஜெய ஜெய
ஈசன் தந்தருள் மகனே ஜெய ஜெய

Koviloor Digital Library

உன்னிய கருமம் முடிப்பாய் ஜெய ஜெய
ஊர்நவ சந்தி யுகந்தாய் ஜெய ஜெய
எம்பெரு மானே இறைவா ஜெய ஜெய
ஏழுல குந்தொழ நின்றாய் ஜெய ஜெய
ஐயா கணபதி நம்பியே ஜெய ஜெய
ஒற்றை மறுப்புடை வித்தகா ஜெய ஜெய
ஓங்கிய ஆனைக் கன்றே ஜெய ஜெய
ஔவிய மில்லா அருளே ஜெய ஜெய
அஃகர வஸ்து ஆனவா ஜெய ஜெய
கணபதி என்வினை களைவாய் ஜெய ஜெய
ஙப்போல் மழுவொன் றேந்திய ஜெய ஜெய
சங்கரன் மகனே சதுரா ஜெய ஜெய
ஞயநம் பினர்பா லாடியே ஜெய ஜெய
இடம்பட விக்கின விநாயகா ஜெய ஜெய
இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜெய ஜெய
தத்துவ மறைதரு வித்தகா ஜெய ஜெய
நன்னெறி விக்கின விநாயகா ஜெய ஜெய
பள்ளியி லுறைதரும் பிள்ளையாய் ஜெய ஜெய

Koviloor Digital Library

மன்று ளாடும் மணியே ஜெய ஜெய
இயங்கிய ஞானக் குன்றே ஜெய ஜெய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜெய ஜெய
இலவக் கொம்பொன் றேந்தியே ஜெய ஜெய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜெய ஜெய
அழகிய வானைக் கன்றே ஜெய ஜெய
இளமத யானை முகத்தாய் ஜெய ஜெய
இரகுபதி விக்கின விநாயகா ஜெய ஜெய
அனந்தலோ பாதிஅடி தொழ அருளே ஜெய ஜெய

பிள்ளையார் சிந்தனை முற்றிற்று.

பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை

எள்ளு பொரித்த பொரியும் இடித்தவல்
தன்னிற்கலந்து
வள்ளிக்கிழங்கை திருத்தி
வாழைப்பழத்தை யுரித்து

Koviloor Digital Library

உள்ளியபாகு திரட்டி உண்ணும்படியே
தருவோம்
கள்ளத்திருமால் மருகா கணபதி சப்பாணி
கொட்டாயே
ஆறு தேங்கா யவல்தூணி அதற்குத்
தகுந்த எள்ளுருண்டை
நூறுகுடலை மாம்பழம் நொடிக்குமளவி
லமுது செய்
வல்ல பிள்ளாய் ஆடல் பாடல் சங்கீதம்
அடியேன் காண நின்றாடாயே
சண்டுபெருச்சாளி மீதேறிச்
சடுகுடு என்ன உலாவி இண்டை
இளம்பிறை சாய
இணங்கிய கொம்போரிரண்டுத
அண்டத்தமரர் துதிக்க
அடைக்கலங்காத்த பிரானாரே
குண்டைக்கணபதி நம்பி

Koviloor Digital Library
குடங்கையாற் சப்பாணி கொட்டாயே

பொழுது விடிந்துபொழுது

போய்த்திருமலை மேலேற வேண்டும்

ஏறிமலர்ந்துபூ கொய்ய வேண்டும்

கொய்து திருமுடி சாத்தவேண்டும்

சாத்தியே கைகட்டி நிற்க வேண்டும்

நின்று திருவிளக்கேற்ற வேண்டும் ஏற்றி

அரகரா என்ன வேண்டும்

ஐயா கணபதி நம்பி ஆயிர

நாமமுடையாய்

பொய்யில்லா மெய்யுரைப்பாய்

போனதெல்லாம் தருவாய்

வெள்ளித்தாலம் பூசி வைத்து

வேண்டும்படியே யிட்டுண்டு

பள்ளிக்கேற்ப நடவாய் பாக்கியம் செய்த

Koviloor Digital Library

பிள்ளாய்

பிள்ளாய் பிள்ளாய் பேருடையீர்
பிரமமென்னும் பேருடையீர்
பிள்ளைகள் தங்கள் பிரானாரே இருந்தீரே
பிரானாரே
எங்கள் மனது கலங்காதோ
பள்ளித்தடுக்கும் கையேடும்
படிக்கும் சுவடியும் பரிந்தெடுத்து
துள்ளித்திரியும் கால்தன்னை
சுகமே நிறுத்தும் பிரானாரே ஓடாதே
ஒளியாதே
இட்டதே சோறும் பெற்றதே கறியும்
உண்டுதா ங்கி பூசைமுடித்து
வெள்ளிமுளைக்கப் பள்ளிக்கு வாரும்.

பள்ளியிற் கிள்ளையார் சிந்தனை

முற்றிற்று.

Koviloor Digital Library

விநாயகர் போற்றி

வேழ முகத்து விநாயக போற்றி
பேழை வயிற்றுப் பிள்ளாய் போற்றி
ஏழைக்கு அருள்செய் எம்மான் போற்றி
வாழ வகுக்கும் வள்ளால் போற்றி
சிவனார் பெறுமுதல் செல்வா போற்றி
சேயிழை உமைதரு சிறுவா போற்றி
திருமால் தனக்கு மருகா போற்றி
திருமால் மகிழுமாப் பிள்ளாய் போற்றி
யானை உரித்தவன் மருமான் போற்றி
யானையைக் கைபெறு கோனே போற்றி
யானையால் வள்ளியை வென்றாய் போற்றி
யானை மணாளனின் அண்ணா போற்றி
யானை முகத்தனை அழித்தாய் போற்றி
பெருச்சாளி ஏறும் பெரியோய் போற்றி
பேணுவார் பிழைகள் பொறுப்பாய்போற்றி
வள்ளிதெய் வானை மைத்துன போற்றி

Koviloor Digital Library

வல்லபை மங்கை மணாளா போற்றி
கடிமணம் விரும்பாக் கணேச போற்றி
மடியினில் மாதினை வைத்தாய் போற்றி
சித்தி புத்தியின் தெய்வமே போற்றி
முத்தி கொடுக்கும் முதல்வா போற்றி
மூலை முடுக்கெலாம் முளைத்தாய் போற்றி
மூவிரு முகத்தோன் முன்னவ போற்றி
சிதறுகாய் சிறுவருக்கு ஈவாய் போற்றி
சிவன்தேர் அச்சினைச் சிதைத்தாய் போற்றி
கொம்புஎழுத் தாணியாய் கொண்டாய் போற்றி
எம்பிரான் பிறையதில் இணைத்தாய் போற்றி
மலையினில் பாரதம் வரைந்தாய் போற்றி
மலைகள் மகிழுமா மணியே போற்றி
முன்வணக் கங்கொள் முனைவ போற்றி
பன்னிரு தம்பிகண் எண்ணினை போற்றி
பின்னவன் முழுமிடப் பிணங்கினை போற்றி
அன்னையின் அணைப்பால் ஆறினை போற்றி

Koviloor Digital Library

என்றவர் இடரைக் களைவாய் போற்றி
எண்ணிய முடிக்க அருள்வாய் போற்றி
பரமன் மடியுறை பண்ணவா போற்றி
பார்வதி ஈன்ற பாலா போற்றி
அப்பம் அவல்பொறி கப்புவாய் போற்றி
இப்புவி எல்லாம் இருப்பாய் போற்றி
ஓங்கா ரப்பொருள் உணர்த்துவாய் போற்றி
தீங்கெலாம் அகற்றும் செம்மல் போற்றி
குட்டிக் குனிப்புறக் கொள்வாய் போற்றி
பட்டி தொட்டியெலாம் படர்வாய் போற்றி
குளக்கரை தொறும்குடி கொண்டாய் போற்றி
அளப்பரும் ஆற்றல்கொள் அம்மான் போற்றி
அரசின் நிழல் அமர் அரசே போற்றி
பரவுவார் பவப்பிணி அறுப்பாய் போற்றி
அருகினை ஆசையோடு அணிவாய்போற்றி
உறுபெரு மோதகம் உவப்பாய் போற்றி
உலனீன்ற கன்னியின் குலமுதல் போற்றி

Koviloor Digital Library

நலனெல்லாம் நம்பர்க்கு அருள்வாய்போற்றி
மலைபோல் வருதுயர் மாய்ப்பாய் போற்றி
கலைபோல் கருத்துள் வளர்ப்பாய் போற்றி
அலகிலா விளையாட்டு அயர்வாய் போற்றி
உலகெலாம் அடக்கி உந்தியாய் போற்றி
மலைமகள் மடிதவழ் மைந்தா போற்றி
நலம்நுகர் அவர்திறம் நகைப்பாய் போற்றி
புலவர்க்கு விருந்தாய்ப் பொலிவாய் போற்றி
கலக லெனச்சிறார்க்குப் பொலிவாய் போற்றி
பேரொளி பரப்பும் பெருமுடி போற்றி
பாரதம் எழுதிய ஓர்பிறை போற்றி
கூருறும் மற்றைக் கொம்பும் போற்றி
கார்என் அருள்பொழி கண்இணை போற்றி
நான்மறை பகர்ந்தருள் நால்வாய் போற்றி
வான்குறை கேட்டருள் மாச்செவி போற்றி
மோதக மணநுகர் மூக்குப் போற்றி
போதகப் புண்ணியம் பொலிமுகம் போற்றி

Koviloor Digital Library

மண்முழுது அடக்கிய வயிறு போற்றி
கண்அகல் உந்திக் கமலம் போற்றி
வாரி வழங்குகை ஐந்தும் போற்றி
சீரியோர் முடிபடி திருவடி போற்றி
சிவனார் கோயிலில் திகழ்வாய் போற்றி
தவமாச் செல்வர்சொல் தவமே போற்றி
அம்பிகை கோயிலும் அமர்வாய் போற்றி
நம்பினார் துன்பமெலாம் நலிவாய் போற்றி
தம்பி கோயிலும் தங்குவாய் போற்றி
உம்பரும் போற்றும் ஒருவ போற்றி
காளி கோயிலும் காப்பாய் போற்றி
ஊழி தோறும் உலவுவாய் போற்றி
பெருமாள் கோயிலும் பிறங்குவாய்போற்றி
திருமால் தங்கைநற் செல்வா போற்றி
அடியார் கோயிலும் அமர்வாய் போற்றி
கடிசேர் அருகணி கணபதி போற்றி
தணிப்பெறுங் கோயிலும் சார்வாய் போற்றி
மனிதரைக் கவர்தரு வள்ளால் போற்றி

Koviloor Digital Library

எங்கும் இருக்கும் இறைவ போற்றி
மங்கலம் தொடங்கமுன் வருவாய் போற்றி
கங்கை அணிந்தவன் கனியே போற்றி
நங்கை உமைதரு புங்கவ போற்றி
எளிமையில் அருள்புரி இறைவ போற்றி
ஏழைகள் பங்கில் இருப்பவ போற்றி
தும்பிக் கையெறு தோன்றல் போற்றி
நம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
அறிவு மதம்பொழி ஆனையே போற்றி
குறைவிலாப் பெருங்குணக் குன்றே போற்றி
கூத்துடை யான்தரு குமரா போற்றி
கூத்து உகந்து ஆடும் குரிசில் போற்றி
சந்திதோறும் இருக்கும் தத்துவம் போற்றி
சிந்தையுட் புகுந்த தேவா போற்றி
கயமுக கணநாதா போற்றி! போற்றி
விக்கின விநாயக போற்றி! போற்றி
எண்ணிய ஈவாய் போற்றி! போற்றி
புண்ணிய பிள்ளையார் போற்றி! போற்றி

Koviloor Digital Library

ஔவைக்கு அருளினாய் போற்றி
அன்பர்க்கு நேசனே போற்றி
மனதில் மகிழ்ச்சியைத் தருவாய் போற்றி

மங்களம் தந்திடும் பிள்ளையாரே
போற்றி! போற்றி!!

வெள்ளெருக்குவேர் விநாயகர்

வெள்ளெருக்கின் வேர் குணம் மிக உயர்ந்தது. இதை சாதாரணமாக வீடுகளில் வைத்திருந்தாலே தோஷங்கள் நீங்கி சுபிட்சம் பெருகும்.

இந்த வெள்ளெருக்கு வேரில் விநாயகர் சிற்பம் செய்து வீட்டில் வைத்து பூஜைசெய்து வந்தால் நீண்ட நாட்களாகத் தடைபட்டு வரும் திருமண முயற்சிகள், வேலைவாய்ப்பு முயற்சிகள், தொழிலபிவிருத்தி, வீடகட்டுதல் முதலிய

Koviloor Digital Library
அனைத்திறகும் தடைகள் நீங்கி காரிய சித்தி உண்டாகும். மேலும் பில்லி, சூனியம் மற்றும் திருஷ்டி, பொறாமை முதலியவை நெருங்காமல் சகலநலன்களும் பெற்று மன மகிழ்வுடன் வாழ்வர்.

திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகி
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே

Koviloor Digital Library

முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
 அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
 அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
 அக்கண மணமருள் பெருமாளே!

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
 ஒண்கடலில் தேன் அமுதத்து உணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
 என்றன் உயிர்க்கு ஆதரவுற்று அருள்வாயே
தம்பி தனக்காக வனத்து அணைவோனே!
 தந்தை வலத்தால் அருள்கைக் கனியோனே!
அன்பர் தமக்கு ஆனநிலைப் பொருளோனே!
 ஐந்து கரத்து ஆனைமுகப் பெருமாளே!

– அருணகிரிநாதர்

Koviloor Digital Library

வான்முகில் வழாது பெய்க!
　　மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க!
　　குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க,
　　நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
　　விளங்குக உலகம் எல்லாம்

ஆறிரு தடந்தோள் வாழ்க
　　அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
　　குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
　　யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
　　வாழ்க சீர் அடியார் எல்லாம்.

Koviloor Digital Library

உ
சிவமயம்

அருள்மிகு
லயன் சித்தி விநாயகர்
சிங்கப்பூர்

அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெலாம் பெருக வேண்டின்
லயன் சித்தி விநாயகர் தெய்வக்
களஞ்சியத் திருக்கை சென்று
108 பிரகாரம் சுற்றி வந்து பாரீர்
பொய்யில்லை கண்ட உண்மை.

Koviloor Digital Library

ஓம் ஏகதந்தாய வித்மஹே!
வக்ர துண்டாய தீமஹி!!
தந்நோ தந்தி: ப்ரசோதயாத்!



ஓம் ஶ்ரீம், ஹ்ரீம், க்லீம், க்லௌம்,
கம், கணபதயெ நமஹ,

Koviloor Digital Library

கிழமை	இராகு	குளிகை	எமகண்டம்	வாராசூலை
ஞாயிறு	4.30 to 6.00	3.00 to 4.30	12.00 to 1.30	மேற்கு
திங்கள்	7.30 to 9.00	1.30 to 3.00	10.30 to 12.00	கிழக்கு
செவ்வாய்	3.00 to 4.30	12.00 to 1.30	9.00 to 10.30	வடக்கு
புதன்	12.00 to 1.30	10.30 to 12.00	7.30 to 9.00	வடக்கு
வியாழன்	1.30 to 3.00	9.00 to 10.30	6.00 to 7.30	தெற்கு
வெள்ளி	10.30 to 12.00	7.30 to 9.00	3.00 to 4.30	மேற்கு
சனி	9.00 to 10.30	6.00 to 7.30	1.30 to 3.00	கிழக்கு

Koviloor Digital Library

Koviloor Digital Library

A. No. 30202
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library
Thirumagal
04565 - 232991